செய்தி வெளியீடு எண். 151 நாள் : 14.03.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் 25.03.2017 அன்று நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

~~~~~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் 2016–2017–ம் ஆண்டுக்கு மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் 25.03.2017 அன்று மாவட்ட ஆட்சியரின் பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் காலை 9.00 மணியளவில் துவங்கி நடைபெறவுள்ளது. இதில் தடகளம், கையுந்து பந்து, வளைகோல் பந்து ஆகிய போட்டிகள் நடைபெறும். இப்போட்டியில் கலந்து கொள்ள வயது வரம்பு கிடையாது. ஆண், பெண் இருபாலரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். விருப்பம் உள்ள மாணவ மாணவியர்கள் தங்கள் பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து வயது மற்றும் படிப்புச் சான்றிதழ் (Bonafied Certificate) பெற்று போட்டிகள் நடைபெறும் அன்று காலை 8.00 மணியளவில் நுழைவு படிவத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். மாணவ மாணவியர்கள் அல்லாதோர் குடும்ப அட்டை நகலினை சமர்ப்பிக்க வேண்டும். ஒரு வீரர் அல்லது வீராங்களை இரு தடகளம் போட்டி மற்றும் ஒரு குழுப் போட்டியில் பங்குபெறலாம். போட்டிகள் நடைபெறும் அன்று காலை 8.00 மணிக்குள் நுழைவு படிவம் சமர்ப்பிக்கும் நபர்கள் மட்டுமே போட்டியில் பங்கு பெற அனுமதிக்கப்படுவார்கள். போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு தினப்படி மற்றும் பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது. போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தடகளப் போட்டியில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும், குழுப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் இரண்டு அணிகளுக்கு பரிசு, சான்றிதழ்களும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**
~~~~~~~~~